## உங்களுக்குரிய ஆதரவு ஒருங்கிணைத்தலை தென்மேற்கு இலண்டனுக்கு அப்பால் விரிவாக்குதல்.

கோவிட்-19 பெருந்தொற்று நோயின் விளைவாக, மருத்துவமனைகளுக்கும், ஜிபி-க்களுக்கும் இடையிலான தகவல் பகிர்தல், தென்மேற்கு இலண்டனுக்கு வெளியே உள்ள இதர பகுதிகளையும் உள்ளடக்கியதாக விரிவாக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, இந்த வகையிலான தகவல் பகிர்வு முறையை இலண்டன் அடங்கலும், சூழவுள்ள கோட்டங்களிலும் விரிவாக்கும் வகையில் சேவைகளை அதிகரிக்க நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

## எந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும்?

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல், கீழ்க்கண்டவை உட்பட, வளர்ந்தோர் சுகாதாரம் மற்றும் சமூக ஆதரவு, மற்றும் குழந்தைகளின் சுகாதாரம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும்.:

- உங்கள் பெயர், முகவரி, மற்றும் என் எச் எஸ் எண்
- சந்திப்பு நியமனங்கள் மருத்துவமனை வருகைகள்
- நோய் கண்டுபிடிப்புக்கள், மருந்துகள், ஒவ்வாமைகள் உட்பட முக்கிய பிணி, சமூக கவனிப்பு வரலாறு
- இரத்தப் பரிசோதனை, எக்ஸ்-றே/ஸ்கான் அறிக்கைகள் போன்ற சமீபத்திய முடிவுகள்

சட்டத்தால் தவிர்க்கப்பட்ட உணர்வுகளைப் பாதிக்கும் தகவல்கள், குழந்தைகளின் சமூக ஆதரவு பற்றிய தகவல்கள் தற்போது பகிர்ந்துகொள்ளப்படமாட்டா.

## என்னைப் பற்றிய தகவல்கள் பாதுகாப்பாக இருக்குமா?

உங்களைப் பற்றிய தகவல்கள், தற்போது நடைமுறையில் உள்ள தரவுகள் பாதுகாப்புச் சட்டத்தால் பாதுகாக்கப்படுவன. அவை இரகசியமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்கப்படவேண்டும்.

## மேலும் தகவல்களுக்கு

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் பற்றி மேலும் தகவல் பெறுவதற்கு செல்லவும்:

www.swlondon.nhs.uk/connectingyourcare

## எங்களுடன் தொடர்பு கொள்ளவும்


@ connectingyourcare@swlondon.nhs.uk

0203 668 3100


South West London
Health & Care Partnership

# உங்களது பராமரிப்பதை தொடர்புபடுத்தல்

தென் கிழக்கு London முழுவதும் உங்களது பராமரிப்பை நாம் தொடர்புபடுத்தும் வழியை மேம்படுத்துகிறோம் வேறு NHS சேவைகளிலுள்ள உங்களது பதிவேடுகளை உங்களுக்குத் தேவைப்படும் போது ஆரோக்கிய மற்றும் பராமரிப்பு தொழில்சார் ஊழியர்களால் விரைவில் பார்வையிட முடியும்

# உங்களுக்குரிய ஆதரவை (CARE) ஒருங்கிணைத்தல் என்றால் என்ன?

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல், உங்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் வழிமுறையை மேம்படுத்தும் நோக்குடன், தென்மேற்கு இலண்டன் தழுவிய சுகாதார மற்றும் ஆதரவுச் சேவைகளை ஒருங்கு சேர்க்கிறது எனலாம்.. இதன் அர்த்தம், இந்தத் தகவல்கள் கிடைக்கவேண்டிய சுகாதார மற்றும் ஆதரவு தொழில்சார் நிபுணர்களுக்கு, உங்களுக்குரிய ஆதரவு, சிகிச்சை என்பன சம்பந்தமான சீரிய முடிவுகளை விரைவாக எடுக்க உதவும் வகையில், விரைவாகவும் பாதுகாப்பாகவும் கிடைக்கும் என்பதாகும்.

தென்மேற்கு இலண்டனில் பரவலாக அமைந்துள்ள மருத்துவமனைகள் மற்றும் ஜிபி சிகிச்சை நிலையங்கள் போன்ற சில சேவைகள் 2019-ம் ஆண்டு முதல் இந்த வழியில் தகவல்களைப் பகிர்ந்து வந்துள்ளன. செப்டம்பர் 2020 முதல் தென்மேற்கு இலண்டன் அடங்கலாக மேலும் பல அமைப்புக்கள் இதேவழியிலான தகவல் பகிர்தலை நிரந்தரமாக மேற்கொள்ளவுள்ளன.

## இது ஏன் முக்கியம்?

உங்கள் சுகாதாரம் மற்றும் ஆதரவு பற்றிய முக்கிய தகவல்களை, மின்னியல் ஊடான நிகழ்நேரத்தில், வாசிப்பு-மட்டும் வடிவத்தில் சுகாதார மற்றும் ஆதரவு தொழில்சார் நிபுணர்களால் அணுகமுடியும். ஒர் அவசர சூழ்நிலையில், நிபுணர்கள் உங்களுக்கு உதவும் வேளையில் இத்தகவல்கள் தீர்க்கமானவையாக அமையலாம்.

## உங்களுக்குக் கிடைக்கும் பயன்கள் என்ன?

- உங்களுக்கு ஆதரவு வழங்கும் ஆட்களால் உடனுக்குடன் முக்கிய தகவல்களைப் பார்க்க முடியும்
- உங்கள் ஆதரவு பற்றிய முடிவுகள் மேலும் விரைவாக எடுக்கப்படலாம்
- அனாவசிய, மற்றும்/ அல்லது மீள்-சந்திப்பு நியமனங்களையும் பரிசோதனைகளையும் நீங்கள் தவிர்த்துக்கொள்ளலாம்
- உங்களுக்கு ஆதரவு வழங்கும் ஏனைய ஆட்களையும் அமைப்புக்களையும் பார்ப்பது இலகுவாக இருக்கும்
- உங்கள் ஆதரவு மற்றும் அனுபவத்தை மேம்படுத்தும் பொருட்டு, வெவ்வேறு அமைப்புக்களில் உள்ள ஆட்கள் ஒன்றிணைந்து பணியாற்ற அது உதவுகிறது
- உங்களைப் பற்றிய தகவல்களை எவரெவர் பார்த்தார்கள் என்று நீங்கள் அறியக்கூடியதான மேம்பட்ட தணிக்கைத் தடங்களை அது வழங்குகிறது

## உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தலில் உள்ள அமைப்புக்கள் யாவை?

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார மற்றும் ஆதரவு வழங்குநர்கள் வருமாறு:

- மருத்துவமனைகள்
- ஜிபி சிகிச்சை நிலையங்கள்
- சமூக சேவைகள்
- உளநல சேவைகள்
- சமூக கவனிப்பு சேவைகள்
- என் எச் எஸ் 111 மற்றும் பணி நேரத்துக்கு அப்பாலான சேவைகள்
- சில “ஹொஸ்பிசஸ்” காப்பகங்கள், சமூக மருந்தகங்கள், கவனிப்பு நிலையங்கள்